**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**

**S.C. 30/2019** P.W. 1

Deposition of witness for Prosecution:

Name : திரு. ஓ.எஸ்.மணியன் Father's Name . சோமுதேவர்

Village :. ஓரடியம்புலம் Age . 70

Date : 31.01.2024

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 31.01.2024.
( Accused present)

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்சமயம் வேதாரண்யம் சட்ட மன்ற உறுப்பினராக இருந்து வருகிறேன். சம்பவம் நடைபெற்ற காலத்தில் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தேன். அந்த நேரத்தில் கட்சியில் ஒருகிணைந்த மாவட்ட செயலாளராகவும் இருந்தேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 28.01.2010 ம் தேதி இரவு 7 மணிக்கு மருதூர் தெற்கு கடைத்தெருவில் உள்ள கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் என்னுடைய கட்சியை சேர்ந்த வெங்கடாச்சலதேவர் மகனின் திருமணம் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. அந்த திருமணத்திற்கு சுமார் 2000 பேர் வந்திருந்தார்கள். திருமணத்தை முடித்துவிட்டு டிபன் சாப்பிட்டுவிட்டு என் கட்சிகாரர்களுடன் திரும்ப வந்துக்கொண்டிருந்தபோது என்னுடன் எஸ்.டி.ரவிச்சந்திரன், எம்.ஏ. ராதா( என்ற ) ராதாகிருஷ்ணன், சிவானந்தம் மற்றும் பலருடன் வந்துக்கொண்டிருந்தேன். அப்போது படியில் பெண்கள் அதிகமாக இறங்கி கொண்டிருந்தார்கள். அதனால் நின்று நின்று வந்து கொண்டிருந்தோம். வாசலில் வந்தபோது இரண்டு பக்கமும் கும்பல் கூடியது. அதில் எல்.எஸ்.சி. பழனியப்பன் ஏற்கனவே அதிமுக ஒன்றிய செயலாளராக இருந்து அவரை கட்சியில் இருந்து 28.01.2010 அன்று காலை நீக்கி அறிவிப்பு வந்திருந்தது. அவர் என்னை பார்த்து இவனை கொன்னுடுங்கடா விட்டுடாதிங்கடா என்று என்னை பார்த்து சொல்லி என் கழுத்தை நெறித்தார். அவருடன் வந்த இரண்டு பேர் என் மேல் சட்டையை பிடித்து இழுத்தார்கள்.

**S.C. 30/2019** P.W. 1

அவருடன் வந்த மற்ற சிலபேர் வேஷ்டி, சட்டை எல்லாம் பிடித்து இழுத்தார்கள். எல்.ஏ.சி. பழனியப்பன் இவன் வேஷ்டியை உறுவுங்கடா என்று சத்தம்போட்டார். அப்போது பாலமுருகன், கட்ட செந்தில் ஆகியோர் வந்து என் வேட்டியை பிடித்து இழுத்தார்கள். ஆயக்காரன்புலத்தை சேர்ந்த வீரபாண்டியன் என்பவர் என் அன்ட்ராயரை பிடித்து இழுத்து என்னை அவமான படுத்தப்பார்த்தார்கள். நான் சுதாரித்து வேட்டியை பிடித்துக்கொண்டேன். அப்போது எல்.எஸ்.இ. பழனியப்பன் துணியை அவுத்து அவமானபடுத்துங்கடா என்று சொல்லி அவர் வலது கையால் என் இடது கண்ணில் குத்திவிட்டார். கண்ணிலிருந்து ரத்தம் வந்தது. மூக்கு உடைந்து ரத்தம் ஊத்தியது. வலது பக்கம் முகமும் வீங்கிவிட்டது. தாணிக்கோட்டகத்தை சேர்ந்த மாக்கன் என்ற முருகானந்தம் கையில் கம்பியுடனும் மருதூர் தெற்கை சேர்ந்த கார்த்திகேயன் கையில் சவுக்கு கட்டையுடனும் மருதூர் தெற்கை சேர்ந்த வைத்தியநாதன், சுதாகர், ஐயப்பன், தகட்டூரை சேர்ந்த ஏ.வி.குமரவேல், பழனிவேல், வீரமணிகண்டன், தாணிக்கோட்டகத்தை சேர்ந்த தனபால், வாய்மேட்டை சேர்ந்த அருணகிரி, பஞ்சநதிகுளம் நடுசேத்தியை சேர்ந்த ரஜினி, செந்தில் மற்றும் சுமார் 20 பேர் இருப்பார்கள் திருமண மண்டப வாசலில் இருந்து ரோட்டுக்கு இழுத்துக்கொண்டுபோய் கீழே தள்ளி மிதித்தார்கள். கட்டையால் இடது பக்க தொடையில் அடித்தார்கள், வயிற்று பகுதியிலும் அடித்தார்கள். இவனை கொன்னுடுங்கடா விட்டுடாதீங்க என்று சொன்னார்கள். என்னுடைய மேல் சட்டை பாக்கெட்டில் ஒரு பேனா, அம்மாவின் படம், ரூ.600/- பணம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டார்கள். இந்த சம்பவம் எதனால் நடந்தது என்று கேட்டால் பழனியப்பனின் ஊர் தகட்டூர் ஆகும். அங்கு கோவிந்தன்காடு என்ற குக்கிராமம் இருக்கிறது. அதில் முள்ளியாறு பாலம் போட்டு அந்த பாலத்தில் இருந்து கோவிந்தன்காடு கிராம் வரை போட்ட ரோட்டை அகலப்படுத்த வேண்டியதாக இருந்தது. அந்த ஊரில் இருந்த சாதாரண ஏழைகள்கூட இடத்தை விட்டுக்கொடுத்துவிட்டார்கள். பழனியப்பனிடம் கேட்டப்போது அவரது மனைவி பெயரில்இருப்பதால் கொடுக்க வாய்ப்பில்லை என்று சொல்லிவிட்டார். அந்த காண்ட்ராக்ட் காரரிடம் பல லட்சம் பணம் கேட்டு

வற்புறுத்தியதாக சொன்னார்கள். அப்போது அவர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார். அந்த ரோடு ஊர் மக்களுக்கு பயன்படுவதாக இருந்தது. பொது நலனுக்கு அவர் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்பதால்தான் ஒன்றிய செயலாளர் பதவியில் இருந்து 28.01.2010 அன்று நீக்கி அறிவிப்பு வந்தது. அதனால் என் மீது கோபம் கொண்டு இந்த சம்பவத்தை நிகழ்த்திவிட்டார்கள். எதிரிகள் கூட்டமாக இரண்டு சுமோ காரிலும், இன்னொரு பெரிய டாடா காரிலும் இரண்டு ஆட்டோவிலும் வந்தார்கள். அதிலேயே திரும்ப ஏறிபோய்விட்டார்கள். இந்த சம்பவம் நடந்தபோது எஸ்.டி. ரவிச்சந்திரன் மற்றும் மருதூர் மூர்த்தி ஆகிய இருவரும் சமாதான படுத்த வந்தார்கள். அவர்களுக்கும் அடிப்பட்டு எஸ்.டி. ரவிசந்திரன் சிகிச்சையில் இருந்தார். எஸ்.டி. ரவிசந்திரன் காரையும் அடித்து உடைத்துவிட்டார்கள். அந்த கார் நம்பர் டிஎன் 50 இ 99 ஆகும். அதன் சேதமதிப்பு சுமார் 2 லட்சம் இருக்கும். அன்று நான் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து 10.30 மணிக்கு போலிசார் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அதசாஆ.1** ஆகும். என்னை தாக்க பயன்படுத்தி ஆயுதங்களை அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள்தான் எதிரிகள் சம்பவத்தில் பயன்படுத்திய ஆயுதங்கள் ஆகும். இரும்பு கம்பி **சா.பொ.1**, சவுக்கு கட்டைகள் **சா.பொ.2** வரிசை ஆகும். எதிரி பழனியப்பன் மீது சுமார் 30 வழக்குள் இருப்பதால் ஏற்கனவே குண்டர் சட்டத்திலும் கைது செய்யப்பட்டிருக்கிறார். இந்த விபரத்தையும் போலிஸ் விசாரணையிலும் சொன்னேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் விசாரிக்கும்போது ஆயுதங்களை காட்டினால் அடையாளம் காட்டமுடியும் என்று சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் விசாரித்தபோது கொடுத்த வாக்குமூலத்திலும் புகாரிலும் என்னை தாக்க இரும்பு கம்பி பயன்படுத்தியதாக சொல்லியிருக்கிறேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது சவுக்கு கட்டை மற்றும் இரும்பு

கம்பியால் தாக்க பட்டதாக சொன்னேன். மேற்கண்ட வகையில் நான் எந்த விபரமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதன் காரணமாகத்தான் போலிசார் விசாரணையில் என்னை தாக்க பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை அடையாளம் காட்ட முடியும் என்று சொன்னேனா என்று கேட்ட கேள்விக்கு ஞாபகம் இல்லை என்று மழுப்பலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார், போலிஸ் விசாரணை, விபத்து பதிவேடுகளில் சொல்லாத விபரத்தை இரும்பு கம்பியை முன் நிறுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

" பழனியப்பனின் ஊர் தகட்டூர் ஆகும். அங்கு கோவிந்தன்காடு என்ற குக்கிராமம் இருக்கிறது. அதில் முள்ளியாறு பாலம் போட்டு அந்த பாலத்தில் இருந்து கோவிந்தன்காடு கிராம் வரை போட்ட ரோட்டை அகலப்படுத்த வேண்டியதாக இருந்தது. அந்த ஊரில் இருந்த சாதாரண ஏழைகள்கூட இடத்தை விட்டுக்கொடுத்துவிட்டார்கள். பழனியப்பனிடம் கேட்டபோது அவரது மனைவி பெயரில்இருப்பதால் கொடுக்க வாய்ப்பில்லை என்று சொல்லிவிட்டார். அந்த காண்ட்ராக்ட் காரரிடம் பல லட்சம் பணம் கேட்டு வற்புறுத்தியதாக சொன்னார்கள். அப்போது அவர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார். அந்த ரோடு ஊர் மக்களுக்கு பயன்படுவதாக இருந்தது. “ என்று முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொன்னேன்.

மேற்சொன்ன விபரத்தை 1வது எதிரிமீது தவறான பிம்பத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக முதல் முறையாக நீதிமன்றத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எதிரிகள் வந்ததாக நான் சொன்ன வாகனங்களின் எண் மற்றும் கலர் ஆகியவைகளை சொன்னேனா என்றால் என்னென்ன வாகனம் என்று பெயர் சொன்னேன். சம்பவம் 5, 6 நிமிடத்தில் நடந்தது. ஆட்டோவின் பெயர்கள் சொன்னேன். நம்பர் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஏனென்றால் வந்தவுடன் கண்ணில் குத்திவிட்டதால் பார்ப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. மேற்சொன்ன விளக்கத்தை வழக்கிற்காக முதல் முறையாக சொல்கிறேன் என்றும் நான் சொன்னபடி எதிரிகள் எந்த வாகனத்திலும் வரவில்லை என்றும் சம்பவத்தில் வாகனங்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார்

ஸ்டேட்மெண்ட்டில் சொன்ன விபரங்களை நான் சொன்னேன். வாகனங்களின் வகைப்படுகளை சொன்னேன்.

போலிசாரிடம் கண்ணில் குத்திவிட்டதால் வாகன எண் பார்க்கமுடியவில்லை என்று விளக்கமாக சொல்லவில்லை என்றால் போலிசார் அவ்வாறு விளக்கமாக கேட்கவில்லை. போலிசார் விளக்கமாக கேட்டார்கள் என்றும் சம்பவத்தில் வாகனங்கள் பயன்படுத்தப்படாததால்தான் நான் அதுப்பற்றி சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி பெயரில் உள்ள வழக்குகளில் வேதாரண்யம் காவல் நிலைய கு.எண்.267/2007 ச/பிகள் 147, 148, 342, 324, 506(2) மற்றும் 307 வழக்கில் நான் 1வது எதிரியாகவும் இந்த வழக்கின் 1வது எதிரி பழனியப்பன் 4 வது எதிரியாகவும் இருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு எங்கள் கட்சி சார்பில் ஆர்பாட்டம் நடந்தபோது திமுக கட்சிகாரர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடாது என்று தடுத்தபோது போடப்பட்டவழக்காகும். அந்த வழக்கு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தபடாமல் தள்ளுபடி செய்யப்பட்டது. எந்த வருடம், எந்த ஆட்சி காலத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதை நான் பார்க்கவில்லை. அதிமுக ஆட்சி காலத்தில் தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் அது நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

1வது எதிரி மீதான வழக்குகள் அனைத்துமே அதிமுக கட்சிக்காக அரசியல் ரீதியாக புனையப்பட்ட வழக்கு என்றும் கட்சிக்காக அவர்கள் சந்தித்த வழக்குகளின் அடிப்படையில்தான் 1வது எதிரிக்கு ஒன்றிய செயலாளர் பதவியை என்னை கலந்தாலோசிக்காமல் கொடுக்கப்பட்டதால் அதன் காரணமாக நான் காழ்ப்புணர்சியில் இருந்தேன் என்றால் சரியல்ல. என்றால் சரியல்ல. அதில் கொலை, கொள்ளை வழக்குகளும் இருக்கிறது.

1வது எதிரி ஏதாவது ஒரு வழக்கில் தண்டிக்கப்படடிருக்கிறாரா என்றால் நான் அவர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் 34 வழக்குகள் இருப்பதாகவும் நாளிதழில் பார்த்து தெரிந்து கொண்டேன். எல்லா பத்திரிக்கைகளிலும் செய்தி வந்திருந்தது. விபரம் சரியாக தெரியாமல் எதிரி மீது அதிக வழக்குகள் இருப்பதாக ஆதாரமின்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எஸ்.டி.ரவிச்சந்திரன் மற்றும் மூர்த்தி ஆகியோர் சமாதான

படுத்த வந்த விபரத்தை புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை அவர்களும் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்கள்.

டிஎன்.50 இ 99 என்ற வாகனத்தை உடைத்ததாகவும் சேத மதிப்பு 2 லட்சம் என்றும் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன கார் நான் சொன்னதுபோல் எதிரிகளால் சம்பவ இடத்தில் உடைத்து சேதப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. நான் திருமண நிகழ்வில் கலந்து கொண்ட திருமண வாசல் படி செங்குத்தான படிக்கட்டுகளாக அமைந்திருக்கும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள படிக்கட்டுதானா என்று கேட்டால் அந்த திருமண மண்டபத்தின் பெயர் இருக்கிறது. வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கும் கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்திற்கும் இடையே சுமார் 25 கிமி தூரம் இருக்கும்.

வாய்மேடு காவல் நிலையத்திற்கும் கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்திற்கும் இடையே சுமார் 15 கிமி தூரம் இருக்கும். நான் சொல்வது தவறு என்றும் வாய்மேடு காவல் நிலையத்திற்கும் திருமண மண்டபத்திற்கும் இடையே சுமார் 4 கிமீ தூரம் என்றால் சரியல்ல. கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்திற்கும் நாகை அரசு மருததுவமனைக்கும் இடையே சுமார் 60 கிமீ தூரம் இருக்கும். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் அனுமத்திக்கப்பட்டிருக்குபோது மருத்துவரிடம் தாக்கப்பட்ட ஆயுதம் பற்றி அருவாள், கட்டை, இரும்பு ராடு என்று குறிப்பிட்டேனா என்றால் அப்போது கண்ணில் குத்தியதாகவும், கட்டையை வைத்து தொடையிலும் உடம்பில் பல பகுதிகளில் அடித்ததாகவும் சொன்னேன். மருத்துவரிடம் முதலில் 5 நபர்கள் தாக்கியதாகவும், பிறகு 10 நபர்கள் தாக்கியதாகவும் பிறகு 20 நபர்கள் தாக்கயதாகவும் சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

நான் மருத்துவமனையில் சேர்ந்தபோது சுமார் இரவு 9 மணியிருக்கும். போலிசார் இரவு 10.30 மணிக்கு வந்துவிட்டார்கள். சம்பவம் நடந்த அன்று காலை முதல் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கடைசியாக இரவு திருமண நிகழ்ச்சிக்கு வந்தோம். அந்த திருமண நிகழ்ச்சிக்கு 1வது எதிரி கலந்து கொண்டாரா என்றால் என் பக்கத்தில்தான் உட்கார்ந்திருந்தார். நான் முதலில்

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சாப்பிடுவதற்காக கீழே இறங்கி போய்விட்டேன். மீண்டும் மேலே ஏறிதான் வெளியே வரவேண்டும். 1வது எதிரி எனக்கு முன்னால் வெளியில் சென்றாரா பின்னால் சென்றாரா என்று எனக்கு தெரியாது நான் சாப்பிடும்போது அவர் சாப்பிட வரவில்லை.

28.01.2010 அன்று காலை 1வது எதிரியை ஒன்றிய செயலாளர் பொறுப்பில் இருந்து நீக்கிய பிறகும் 1வது எதிரி திருமணத்தில் கலந்து கொள்ளவந்த போது என்னைவிட 1வது எதிரிக்கு ஊர் மக்கள் அதிக மரியாதை கொடுத்தார்கள் என்றும் அதை பார்த்து எனக்கு பொறாமையாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் திருமணத்திற்கு வந்தபோது கட்சிக்காரர்கள் எத்தனை பேர் வந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது உறவினர்கள் கட்சிக்காரர்கள் என்று நிறைய பேர் வந்தார்கள்.

1வது எதிரி 2010ம் வருடத்திற்கு முன்பு எத்தனை ஆண்டுகள் ஒன்றிய செயலாளர் பொறுப்பில் இருந்தார் என்றும் வாய்மேடு ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றும் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது. அதை குறிப்பிட்டு சொன்னால் என்னைவிட அவருக்கு செல்வாக்கு அதிகம் என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் குறிப்பிட்டு சொல்ல மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் மண்டபத்தில் சாப்பிட்டுவிட்டுதான் வெளியே வந்தேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வேஷ்டியை ஒண்ணும் இல்லாமல் உறுவுடா என்று சொன்னார் வலுகட்டாயமாக இழுத்தார்கள் நான் கெட்டியாக பிடித்துக்கொண்டேன்.

நான் இந்த விபரத்தை போலிசார் விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன். 1வது எதிரிமீதும் பிற எதிரிகள் மீதும் குற்ற செயல்களை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி வேட்டி மற்றும் அண்ட்ராயர் அவிழ்க்கப்பட்டதாக புகார், போலிசார் விசாரணையில் பொய்யாக சொன்னேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிகளால் அவமானப்படுத்தப்படவில்லை என்றும் அதன் காரணமாகத்தான் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் நீதிமன்ற முதல் விசாரணையிலும் மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி என்னைப்பார்த்து கொல்லுங்கடா இவனை விட்டுடாதீங்கடா என்று சொல்லவில்லை என்றும் வலது கையால்

இடது கண்ணில் குற்றவில்லை என்றும் மற்ற எதிரிகளும் சவுக்கு கட்டையால் என்னை தாக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கண்ணுக்கான மேல் சிகிச்சை சென்னைவரை சென்று பார்த்தேன். மேல் சிகிச்சை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல ஆதாரம் இருக்கிறது.

1வது எதிரி நான் கலந்து கொண்ட திருமணத்தில் கலந்து கொண்டபோது அவருக்கு கிடைத்த அதிகபடியான செல்வாக்கையும் மரியாதையும் பார்த்து நிரந்தரமாக கட்சியை விட்டு நீக்கிவிடவேண்டுமென்றுதான் இந்த பொய்யான புகாரை கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பிரச்சனைக்கு பிறகு 1வது எதிரி அதிமுக கட்சியில் இருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டார் என்றால் சரிதான். புகார் போலிசார் விசாரணையில் என் மூக்கு உடைந்து ரத்தம் கொட்டிய விபரத்தையும் சொன்னேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை போலிசார் நேரடியாக வந்து பார்த்தார்கள். நான் அன்றைய தினம் பல பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உடல் சோர்வோடு வந்து திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திரும்புபோது கூட்ட நெரிசலில் பின்னால் வந்த தொண்டர்கள் தள்ளியதில் படிக்கட்டின் மேல் இருந்து கீழே மனிதர்கள் மீது விழுந்ததில்தான் எனக்கு கண் மற்றும் உடலில் அடிப்பட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நான் சொன்னதுபோல் 28.01.2010 ந் தேதி இரவு 7 மணிக்கு நடைபெறவில்லை என்றும் அதற்கு முன்பு மாலை 6 மணிக்கே நான் கீழேவிழுந்து அடிப்பட்டுவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அதனால்தான் புகாரிலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோதும் நேரம் குறித்து சரியாக சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அடிப்பட்ட பிறகு என்னுடன் இருந்த எஸ்.டி. ரவிச்சந்திரன், மூர்த்தி, ராதா, சிவானந்தம் ஆகியோருடன் கலந்தாலோசித்து ஏற்கனவே நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் தகவல் சொல்லிவிட்டு காலதாமதமாக சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. அதனால்தான் மருத்துவரிடம் குழப்பமான மனநிலையில் எதிரிகளின் எண்ணிக்கையை 5, 10, 20 என்று மாற்றி சொன்னேன் என்றால் சரியல்ல.

வாய்மேடு காவல் நிலையத்தில் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி புகார்

கொடுப்பதற்கு முன்பாகவே குற்ற எண் மற்றும் சட்ட பிரிவுகள் அனைத்தும் முடிவு செய்து தயார் செய்து வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்னது பொய் என்று தெரியவந்துவிடும் என்பதால் முழுமையாக சிகிச்சை பெறாமல் நாகை மருத்துவமனையில் இருந்து வெளியேறினேன் என்றால் மேல் சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு போனேன். என்னுடைய ஆதாரவாளர்களையே சாட்சியாக வைத்து பொய்யாக புகார் கொடுத்து பொய் வழக்கு பதிவு செய்ய வைத்தேன் என்றால் சரியல்ல. என்னுடைய ஆலோசனையின் பேரில்தான் எஸ்.டி.ரவிச்சந்திரன், மூர்த்தி ஆகியோர் காயங்கள் ஏதுமின்றி சொற்ப காயங்கள்என்று சொல்லி நாகை அரசு மருத்துவமனையில் சேர வைத்தேன் என்றால் சரியல்ல. எஸ்.டி. ரவிச்சந்திரன் மேல் சிகிச்சைக்காக மியாட் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மேல் சிகிச்சை விபரங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு ஆவணங்கள் தயார் செய்துகொள்ளாலம் என்று மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல.

என்னுடைய மேல் சட்டை பாக்கெட்டில் இருந்து அம்மா படம், பணம், பேனா ஆகியவை காணாமல் போய்விட்டதாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடன் இருந்த ராதா, ரவிசந்திரன், மூர்த்தி, சிவானந்தம் ஆகிய எல்லோரும் சேர்ந்து 1வது எதிரியுடன் இருக்கும் நபர்களை அடையாளபடுத்தி புகார் கொடுத்தால்தான் சரியாக இருக்கும் என்றும் அப்போதுதான் அவரை கட்சியை விட்டு நீக்கமுடியும் என்று புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 28.01.2010 ம் தேதி 7 மணிக்கு கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் 1வது எதிரியும் நான் புகாரில் சொன்ன மற்ற நபர்களும் இல்லை என்றும் எந்த குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும் நான் சொன்னதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

( 2 வது எதிரி 1 வது எதிரிதரப்பு குறுக்கு விசாரணை தழுவிக்கொள்கிறார். )

**7 வது எதிரிதரப்பு குறுக்கு பிசாரணை**

7 வது எதிரிக்கும் எனக்கும் எந்தவிதத்திலும் முன்விரோதம் எதுவும் இலலை. வைத்தியநாதன் மருதூர் தெற்கு சேத்தி கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். 7 வது எதிரி அந்த ஊரில் ஒரு மதிப்புமிக்க நபர் என்றால் இருக்கலாம். என்னை அவர் சந்தித்தபோதோ அல்லது சாதாரணமாக

பார்க்கும்போதோ என்னிடம் மரியாதை குறைவாக நடந்து கொண்டதில்லை என்றால் சரிதான். 7 வது எதிரி எங்கள் கட்சியில் உறுப்பினர் இல்லை என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. சிலர் உறுப்பினர்களாக இருப்பார்கள் சிலர் ஆதரவாளர்களாக இருப்பார்கள்.

7 வது எதிரி எங்கள் கட்சியில் பொறுப்பாளராக இல்லை என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. கந்தபவுன்ராஜ் திருமண மண்டபத்தில் ஒரு நேரத்தில் 1000 ம் பேர்தான்இருக்க முடியும்என்றால் எல்லோரும் ஒரே இடத்திற்கு நிற்கமாட்டார்கள். சிலர் சாப்பிடபோவார்கள் சிலர் திருமண முடிந்து போய்கொண்டிருப்பார்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள் என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது. திருமணத்திற்கு அந்த சமயத்தில் 2000 ம் பேர் வந்திருப்பதாக நான் சொன்னன் என்றால் வந்து போய் கொண்டிருந்ததாகத்தான் சொன்னேன். இந்த விபரத்தை முதல் விசாரணையிலோ புகாரிலோ சொல்லவில்லை என்றால் இது புரிந்து கொள்ளவேண்டிய விஷயம் சொல்ல முடியாது. புகாரில் திருமணத்தில் சுமார் 2000 ம் பேர் இருந்தார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னை மருத்துவமனையில் அனுமதித்த சமயத்தில் கட்சிகாரர்கள் உடன் வந்தார்களா என்றால் வந்தார்கள். எத்தனை பேர் வந்தார்கள் என்றால் என்னை பெட்டில் அனுமதித்துவிட்டார்கள் அதனால் எத்தனை பேர் வந்தார்கள் என்று தெரியவில்லை. மருதூர் தெற்கு சேத்தி கிராமத்தில் எங்கள் கட்சிகாரர்கள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். போலிசாரிடம் புகார் வாக்குமூலமாகத்தான் கொடுத்தேன். கைப்பட எழுதிக்கொடுக்கவில்லை.

நான் நன்கு எழுதப்படிக்க தெரிந்திருந்தபோதிலும் பல்வேறு பதவிகளில் இருந்தபோதிலும் ஏன் கைப்பட எழுதி கொடுக்கவில்லை என்றால் சம்பவத்தில் என்ன கண்ணில் குத்தி ரத்தம் வந்ததால் நான் எழுதி கொடுக்கவில்லை. புகார் கொடுக்கும்போது எதிரிகள் பெயரை எப்படி சொன்னேன் என்றால் எனக்கே பெயர் தெரிந்ததால் நான் போலிசாரிடம் சொன்னேன். அந்த சமயத்தில் கண்ணில் அடிப்பட்டதால் கண் தெரியவில்லை என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் கட்சிகாரர் கண்ணன் என்பவர் மருதூர் தெற்கு

சேத்தியில் இருக்கிறார் என்றால் சரிதான். அந்த கண்ணன் என்பவர் அவருக்கு வேண்டப்படாத நபர்கள் பெயரை குறிப்பிட்டு சொல்ல சொன்னதன் பேரில் அந்த 7 வது எதிரி பெயரை குறிப்பிட்டு சொன்னேன் என்றால் சரியல்ல.

என்னை இழுத்துக்கொண்டுபோய் எதிரிகள் காலால் மிதித்தாக புகாரில் சொல்லவில்லை என்றால் சம்பவம் உண்மை புகாரில் சொல்லியிருக்கிறேன். போலிசார் என்னை சம்பவம் நடந்த அன்றும் அதன் பிறகு இரண்டு முறையும் மொதம் 3 முறை விசாரித்தார்கள். 7 வது எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து சவுக்கு கட்டையால் அடித்ததாக சொல்வது தவறும் என்றும் 7 வது எதிரியோ மற்ற எதிரிகளோ என்னை சவுக்கு கட்டையால் என்று சொன்னால் சரியல்ல. 7 வது எதிரி கட்டையால் அடித்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அடித்த கூட்டத்தில் அவரும் இருந்தார் அதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் 7 வது எதிரி அந்த இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. திருமண வீட்டுக்காரர்கள் திருமணம் முடிந்து நான் வெளியே போகும்போது என்னை வழியனுப்ப வாசல் வரை வருவார்கள் என்றால் எல்லோராலும் வரமுடியாது கட்சிகார்ரகள் தான் வருவார்கள். திருமணம் முடிந்து சம்பவம் நடந்தததாக சொல்லும் நேரத்தில் அந்த இடத்தில் பெண்கள் நிறைய பேர் வந்ததாக சொல்லியிருக்கிறேன். சம்பம் நடந்த நேரத்தில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை. சம்பவ சாட்சிகளில் அரசு அதிகாரிகளை தவிர மற்றவர்கள் வெளியூர் சாட்சிகள் என்றால் சரியல்ல. சாட்சிகள் பெரும்பாலும் என் கட்சிகாரகள் என்றால் திருமணத்திற்கு வந்தவர்கள்தான் சாட்சிகள் ஆவார்கள்.

திருமண அழைப்பின் பேரில் வந்தவர்களா அல்லது என்னுடன் துணைக்கு வந்தர்களா என்றால் திருமண அழைப்பின் பேரில் வந்தவர்கள். என்னுடன் வந்தவர்கள் திருமண அழைப்பின் பேரில் வந்தவர்கள் என்று போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். 7 வது எதிரி பற்றி புகாரிலும் முதல் வாக்குமூலத்திலும் முன்னுக்கு பின் முரணாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 7 வது எதிரி என்னை கட்டையால் தாக்கல் வில்லை என்றும் இழுத்து வந்தும் தாக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. படியில் இருந்து

**S.C. 30/2019** P.W. 1

நான் கீழேவிழுந்து ஏற்பட்ட சிறு காயத்தை வைத்து எங்கள் கட்சிகாரர்கள் சொன்ன தவறான தகவலின் அடிப்படையில் 7 வது எதிரியை சேர்த்து தவறாக புகார் கொடுத்தோன் என்றால் சரியல்ல. 7 வது எதிரி எவ்வித குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றும் நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவத்தில் வாகனம் சேதப்படுத்தப்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் என் கட்சிகாரர்களை திருப்திபடுத்துவதற்காக 7 வது எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**